DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C.No.253 /2022 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W.6 |
| Name | :பழனிச்சாமி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.07.2023

-----

(எதிரி ஆஜர். )

**முதல் விசாரணை:**

நான் தொட்டப்பநாயக்கனூரில் குடியிருக்கிறேன். பி.ஆர்.சியில் கண்டக்டராக பணிபுரிகிறேன். இந்த வழக்கு விசயமாக போலிசார் என்னை விசாரித்த போது பாலாஜி என்பவர் தற்கொலை செய்துகொண்டார். உசிலம்பட்டி தாலுகா காவல் நிலைய சார்பு ஆய்வாளர் மற்றும் காவலர்கள் அ.சா.1சிங்கம் வீட்டிற்கு முன்னர் வந்தார்கள். வீட்டிற்கு மேலே மாடியில் சென்று தற்கொலை செய்து கொண்ட இடத்தை பார்வையிட்டு குறியீடு செய்துள்ளார்கள். அதற்கு பின்னர் சம்மந்தப்பட்ட வீட்டிற்கு கிழக்கு, மேற்கு திசைகளில் உள்ள வீடுகளை கேட்டறிந்தனர். வரைபடம் வரைந்தார்கள். அந்த இடத்தில் என்னிடம் மற்றும் என்

மச்சினன் சோலை என்பவரிடமும் கையெழுத்து வாங்கினார்கள். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

__குறுக்கு விசாரணை:__

என்னுடைய வீடு வடக்கு தெருவில் உள்ளது. அவர் வீட்டிற்கு வடக்கே சக்திவேல் நாயக்கர் வீடு உள்ளது. அதற்கடுத்து சக்திவேல் நாயக்கர் வீடு உள்ளது. அதற்கடுத்து ஜெயராஜ் வீடு உள்ளது என்றால் சரிதான். அவர் வீட்டின் முன்பாக தென்வடலாக சாலை செல்கிறது என்றால் சரிதான். கிழக்கு புறமும் வரிசையா வீடுகள் உள்ளது என்றால் சரிதான். நானும் அ.சா.1ம் ஒரே சமூகத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். 15பேர் கூட்டமாக நின்றிருந்தோம் அப்பொழுது சார்பு ஆய்வாளர் அழைத்தார் அதனால் சென்றேன். ஒரே கையெழுத்து தான் செய்தேன். போலீசர் அரைமணி நேரம் இருந்திருப்பார்கள். படம் வரைந்து எழுதியிருந்த இன்னொரு பேப்பரில் கையொப்பம் செய்தேன். படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். எனக்கு அன்று விடுமுறை நாளாகும். நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் போலிஸ் அதிகாரிகள் வரைபடம் மற்றும் பார்வை மகஜர் வரைந்து கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல. எனக்கு அ.சா.1 அண்ணன் முறை வேண்டும் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருடைய வீட்டிற்கு அருகிலும், எதிர்த்தார் போலும் மற்ற சமூகத்தை சார்ந்தவர்கள் பல பேர் குடியிருந்தும் அவர்களிடம் கையெழுத்து எதுவும் பெறாமல் என்னை

காவல்நிலையத்திற்கு வரவழைத்து எழுதாத வெள்ளை பேப்பரில் கையெழுத்து வாங்கி கொண்டார்கள் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை: இல்லை.</u>**

/*Sd/* Thiru.P.S.ரஸ்கின் ராஜ்,13.07.2023
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

/உண்மை நகல்/

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.